1992 பிப்ரவரி 6]

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ளக்குட்டை கிராமம் என்பது நான் பிறந்த ஊர். (சிரிப்பு) மாண்புமிகு அமைச்சர் திருமதி இந்திர குமாரி அவர்களும் பிறந்த ஊர் அதுதான். அந்த ஊரிலும், சுற்றுப்புற கிராமங்களான துறிஞ்சிக்குப்பம், நன்னேரி, வெள்ளக் கல், திம்மியம்பட்டு, முண்டிக்கோயில் போன்ற கிராமங்களில் வாழும் சுமார் ஒரு லட்சம் கிராம மக்கள் இன்றைக்கு மருத்துவ வசதி இல்லாமல் அவஸ்தை பட்டுக்கொண்டிருக்கிறார்கள் ''மக்கள் நல்வாழ்வு மருத்துவப் பணிகள், முழுமையாக மக்களுக்குப் போய்ச் சேரவில்லை'' என்று ஆளுநர் உரையிலே 24-வது பாராவிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு முதல்வரவர்கள் இன்று முழு முயற்சி எடுத்து மக்களை மருத்துவப் பணிகள் சென்றடைய வேண்டுமென்று முயற்சி எடுத்தமைக்காக நான் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போலவே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இந்த 76 பிரைமரி ஹெல்த் சென்டர்களை இந்த ஆண்டு துவக்க இருக்கிறார்கள். அந்த 76-லே இந்த வெள்ளக்குட்டையை ஒன்றாகச் சேர்த்து, உடனடியாக அதை ஆரம்பிக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரவர்களும் அவதரித்திர்கள் என்பதற்காக அவ்வளவு அவசரப்படக் கூடாது. (சிரிப்பு).

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களின் கோரிக்கை படி, இந்த ஆண்டு அதைப்பற்றிப் பரிசீலிக்கவிருப்பதாக நாங்கள் தெரிவித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அங்கே பிறந்ததாகத் தெரிவித்தார்கள். எனவே, ஏற்கனவே நல்ல வசதிகள் இருந்ததாகவே தெரிகிறது. இருந்தாலும் கூட இன்றைக்கிருக்கின்ற நிலையைப் பொறுத்து அரசாங்கம் நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 67, திரு. எஸ். எம். துரை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

67—ஆவரம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம்.

*3896—திரு. எஸ். எம். துரை :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டம், ஆத்தூர் தொகுதி ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் குட்டத்து ஆவரம் பட்டியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க அரசு முன்னுரிமை அளிக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டம், ஆத்தூர் தொகுதி ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியம் குட்டத்து ஆவரம் பட்டியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க தற்போது திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். எம். துரை : பேரவைத் தலைவரவர்களே, குட்டத்து ஆவரம்பட்டியில் சுற்றி 25 கிராமங்களில் சுமார் 5,000 மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திண்டுக்கல்லுக்கு வந்து மருத்துவ வசதி பெற வேண்டியதாக இருக்கிறது. ஏழை எளிய மக்களின் காவல் தெய்வமாக இருக்கும் எங்களது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் அடுத்த வருஷமாவது இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைப்பதைப் பற்றி அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு இலட்சத்து மூன்றாயிரத்து முன்னூறு பேர் ஜனத்தொகை என்று கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஊராட்சி ஒன்றியத்திற்குள்ளே உள்பட்டு இப்போழுது மூன்று இடங்களிலே, கன்னிவாடி, புதுக்கோட்டை, ஸ்ரீராமபுரம் என்ற மூன்று இடங்களிலே இப்பொழுது ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அரசினுடைய ஒரு கொள்கையின்படி 30,000 ஜனத்தொகைக்கு ஒரு மருத்துவ மனை—ஆரம்ப சுகாதார நிலையம் என்று வைத்திருக்கிறோம். எனவே, அந்தக் கணக்கிற்குள்ளே இது வருகின்ற காரணத்தால் புதிதாக இந்த இடத்திற்கு இந்த ஆண்டு ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் வரை மக்களின் நலனை முன்னிட்டு ஒரு சப்-சென்டர் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1992 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 5,000 ஜனத் தொகைக்கு ஒரு சப்-செண்டர் வீதம் தமிழகத்திலே இப்பொழுது அமைத்திருக்கிறோம். எனவே அதற்கு உட்பட்டு இந்த இடத்திலே சப்-செண்டர் இல்லாமல் இருந்தால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 30,000 ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று நாம் அமைத்துக் கொண்டிருக்கிறோம். அந்த ஒரு ஊரிலே இல்லாவிட்டால் கூட, ஐந்து மைல் ரேடியஸுக்குள்ளே 30,000 இருக்கிறதே, அப்படிப்பட்ட இடமாகத் தான் ஆவரம்பட்டி இருக்கிறது. ஆகையினாலே மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமா? அது மாத்திரம் அல்ல, நாம் பல இடங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்திக் கொண்டே வருகிறோம். அங்கே அதற்குக் கட்டிட வசதி இல்லை; அங்கே டாக்டர்கள் குடியிருப்பதற்கு வசதி இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆவரம்பட்டியோடு போதும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: இல்லை சார், நான் விஷயத்திற்கு வருகிறேன் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆவரம்பட்டியோடு கேள்வி நின்றால் பரவாயில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவரவர்களே, ப்ளீஸ். ஆகையினாலே கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏதாவது மூன்றாண்டுத் திட்டம் என்று வைத்து இதற்கான ஏற்பாட்டைச் செய்ய முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இப்பொழுது 30,000 ஜனத்தொகை என்று சொன்னது, அந்த ஊரிலே இருக்கின்ற 30,000 ஜனத் தொகை கணக்கு அல்ல. நாம் எந்தவொரு இடத்திலே ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்கிறோமோ அதைச் சுற்றியிருக்கின்ற 30,000 ஜனத்தொகை. அந்தக் கணக்கிலே தான் இப்பொழுது தமிழகம் முழுவதும் அமைத்திருக்கிறோம். எனவே அப்படிப் பார்க்கிறபொழுது இந்த இடத்திலே அதை அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை. எனவே, எதிர் காலத்தில் அதைப் பற்றி யோசிக்கலாம். அதே போன்று, கட்டிடங்களைப் பொறுத்த வரையில் அரசாங்கம் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. கொஞ்ச காலமாக இதற்குக் கட்டிடங்கள் கட்டுவதற்

கான நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் கொஞ்சம் தேங்கியிருக்கிறது. இருக்கின்ற நிதிப் பிரச்சினையைப் பற்றி நாடு முழுவதும் தெரிந்திருக்கிறது. எனவே, அந்த நிதிப் பிரச்சினைக்கு உட்பட்டு எந்தெந்த இடங்களிலே உடனடியாகக் கட்டிடங்கள் கட்ட முடியுமோ அதைக் கட்டுவதற்கான நட வடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. தனியார் துறையின் மூலமாகப் பல பேர் கட்டுவதற்கு முன் வந்து அரசாங் கத்திற்கு முதலிலே பணத்தை அவர்கள் கட்டிவிட வேண்டும்; பி.டபிள்யூ. டி. மூலமாகத் தான் கட்ட வேண்டும் கட்டிடத்தை என்ற நிலையையெல்லாம் மாற்றி அவர்களே கட்டலாம் என்று ஏற்படுத்திய பின்னாலே பல் பேர் முன் வந்திருக்கிறார்கள். எனவே, அப்படி யாராவது வந்தால் கூட தங்களுடைய பகுதி களிலே அல்லது மற்றச் சட்டமன்ற உறுப்பினருடைய பகுதி களிலே வந்தால் கூட அந்தக் கட்டிடத்தை நாம் கட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

முற்பகல் 10-05.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன். ஆவரம்பட்டியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது பற்றி மட்டும் கேளுங்கள்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு 3 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆனால், சில இடங்களில் இடப் பற்றாக்குறை காரணமாக, 2, 2-3/4 ஏக்கர் இருக்கிற இடத்தில் ஆரம்ப சுகாதார நிலை யம் அமைப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. எனவே, இதைத் தளர்த்தி 2½ அல்லது 2-3/4 ஏக்கர் உள்ள இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு, அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனை, அங்கே தங்குகிற மருத்துவர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு குவார்ட்டர்ஸ் இவற்றையெல்லாம் கட்டுவதற்கு குறைந்தபட்சம் 3 ஏக்கர் இருந்தால் வசதியாக இருக்கும் என்று கருதிதான், அரசாங்கம் இதை வைத்திருக்கிறது. மிகக் கடினமாக இடமே கிடைக்காத இடத்திலே தனி நேர்வாகக் கருதி, அதற்கு அரசாங்கத்திலே விதிவிலக்கு அளிப்பது என்பதைப் பற்றி தனித் தனியாக நாம் முடிவெடுக்கலாமே தவிர, இதை குறைத்துக் கொண்டால், பிறகு 2½ ஏக்கர், 2 ஏக்கர், 1½ ஏக்கர், 1 ஏக்கர் என்று குறைந்து கொண்டே போகும். எனவே, 3 ஏக்கர் மினிமம் தேவை என்ற நிலையை அப்படியே வைத்துக் கொள்ளலாம். எங்கேயாவது பிரச்சினை இருக்கிற இடத்தில், தனிப்பட்ட முறையில் அரசு ஆய்வு செய்து அதை ஏற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளலாம்.